# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2164 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

2020 ஆம் கல்வி ஆண்டுக்காக பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுத்தல்

2020 ஆம் கல்வி ஆண்டில் நடைபெறும் ஒரு வருட கால பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்கு தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இப்பாடநெறி கொழும்பு, பேராதனை, ரஜரட்ட மற்றும் யாழ் பல்கலைக்கழகங்களில் நடைபெறும்.

03. அவ்வப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் மொழி மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பாடநெறிக்காக ஒரு மொழி மூலம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் :-

(1) கொழும்புப் பல்கலைக்கழகம் - சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி மூலம்
(2) பேராதனைப் பல்கலைக்கழகம் - சிங்கள மொழி மூலம்
(3) ரஜரட்ட பல்கலைக்கழகம் - சிங்கள மொழி மூலம்
(4) யாழ் பல்கலைக்கழகம் - தமிழ் மொழி மூலம்

04. சகல விண்ணப்பதாரர்களும் தாம் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர் என்பதனை உறுதி செய்ய வேண்டும் :-

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசையாக இருத்தல்.

(ii) 2020.03.20 (Gazette Closing Date) ஆந் திகதியன்று 50 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல்.

(iii) சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியமும் சிறந்த நடத்தையும் கொண்டவராக இருத்தல்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு/உயர் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பிறிதொரு நிறுவனத்தின் பட்டதாரியாகவோ அல்லது அதற்குச் சமனான மட்டத்தில் கவனத்திலெடுக்கப்படும் வேறு தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்.

(v) கீழ்க் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்றிருத்தல் :

(அ) * இலங்கை பிரிவென் ஆசிரியர் சேவை ;
* இலங்கை தனியார் பாடசாலை ஆசிரியர் சேவை ;
* இலங்கை ஆசிரியர் சேவை ;

(ஆ) இலங்கை அதிபர் சேவை ;
(இ) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை;
(ஈ) இலங்கை கல்வி நிர்வாக சேவை.

(vi) பட்டத்திற்குப் பின்னர் 2020.03.20 (Gazette Closing Date) ஆந் திகதியன்று இலக்கம் 04(v) இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் பட்டதாரியாக ஒரு வருட கால சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை :**

(i) கற்பித்தலில் தேசிய டிப்ளோமா நியமனம் பெற்ற ஆசிரியர்கள் 2020.03.20 (Gazette Closing Date) ஆந் திகதியன்று நியமனத்துக்குரிய ஒப்பந்த முறியின்படி தமது கட்டாய சேவைக்காலமான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பின் மற்றும் 4(vi) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பூர்த்தி செய்துள்ளாரெனில் மாத்திரம் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

(ii) கற்கை விடுமுறை பெற்று பிணைமுறிக்கு உட்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் 2020.03.20 (Gazette Closing Date) ஆந் திகதியன்று பிணை முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து அல்லது அவ்வாறின்றேல் அதில் ஐந்து வருடங்கள் (05) பூர்த்தி செய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பிக்க தகைமை பெறுவர்.

(iii) கல்விமாணி பட்டதாரிகள் இப்பாடநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பிக்க முடியாது.

**5.1. தேர்ந்தெடுக்கும் ஒழுங்குமுறை :**

(i) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கினர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் இலக்கம் 04(v) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரி தனக்குரிய சேவை/சேவைகளுக்கான உரிய பதவி/பதவிகளின் சேவைக்காலத்திற்காக நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும். சேவைக்காலத்தின் ஒரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். சேவைக்காலத்திற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சப் புள்ளிகள் 40 ஆகும். விண்ணப்பதாரியின் சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது அவர் 04(v) இல் காட்டப்பட்டுள்ள சேவைகளிலொன்றில் முதல் நியமனம் பெற்று சேவைக்குரிய பதவியில் முதல் கடமையைப் பொறுப்பேற்ற தினம் தொடக்கம் ஆகும்.

**கவனத்திற்கு :**

* 04(v) இல் குறிப்பிடப்பட்ட சேவையில்/சேவைகளின், பதவியில்/பதவிகளில் தொடர்த்தேர்ச்சியாக சேவைக்காலம் இருக்க வேண்டும்.

(iv) எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் சேவைக்காலத்திற்காகக் கிடைக்கும் புள்ளிகள் ஆகியவற்றின் மொத்தம் இறுதிப் புள்ளிகளாகக் கருதி அப்புள்ளிகளின் தொடருக்கமைய பாடநெறிக்காக தெரிதல் நடைபெறும்.

(v) உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கையில் 1% இவர்களுக்காக ஒதுக்கப்படும்.

(vi) பாடநெறியைத் தொடர்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கை அவ்வப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் இடவசதிகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

**5.2 எழுத்துமூலப் பரீட்சை :**

(i) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நடைபெறும்.

(ii) மேற்கூறப்பட்ட 02 மத்திய நிலையங்களில் தாம் விரும்பும் மத்திய நிலையத்தில் விருப்பமான மொழிமூலம் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் பின்னர் மாற்றியமைக்கப்படமாட்டாது.

(iii) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்டு பரீட்சார்த்தி செயற்பட வேண்டும்.

(iv) எழுத்துமூலப் பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது :-

(அ) *பொது அறிவு.-* சமகாலத் தகவல்கள், பொதுஅறிவு, கல்வித் தகவல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான வினாப்பத்திரம் (01 மணித்தியாலம்)

(ஆ) *பொது உளச்சார்பு.-* மொழி ஆற்றல், விளக்கம், தர்க்க மற்றும் புள்ளிவிபர ரீதியிலான திறன் தொடர்பான வினாப்பத்திரம். (நேரம் 1 மணித்தியாலம் 30 நிமிடம்)

**5.3. நேர்முகப்பரீட்சை :**

(i) நேர்முகப்பரீட்சையின் போது பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய தாம் பாடநெறியைத் தொடரத் தகைமை பெற்றவர் என உறுதி செய்ய வேண்டும்.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ii) பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 04(v) இற்குரிய சேவை/சேவைகளுக்கான, உரிய பதவியின்/பதவிகளின் சேவைக்காலத்தை உறுதி செய்வதற்கு உரிய ஆவணங்களை நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். விசேடமாக முதல் நியமனத்திற்குரியதான கடமையைப் பொறுப்பேற்ற தினம் நேர்முகப்பரீட்சையின் போது உறுதி செய்யப்பட வேண்டும். இது பரீட்சார்த்திக்கு சேவைக்காலத்திற்குரிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவியாக அமையும்.

(iii) அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட பிரிவெனாக்கள் மற்றும் அரச அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலிருந்து பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் :-

(அ) பாடநெறிக்காக விடுவிக்கப்படுவதாகவும்,

(ஆ) பாடநெறியைத் தொடரும் காலப்பகுதிக்குள் சம்பளம் கொடுக்கப்படுவதாகவும்,

(இ) பாடநெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதாகவும்,

(ஈ) குறித்த ஆசிரியரின் கற்கைக் கால எல்லைக்குள் அவரது வெற்றிடத்திற்கு வேறு ஆசிரியர் ஒருவரை இணைத்துக்கொள்வதில்லை என்றும்,

(உ) ஆசிரியரின் பணிக்கூறுகள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதாக நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி/நிர்வாக சேவை முகாமையாளரினால் உறுதி செய்யப்பட்ட பிரகடனப் படிவத்தை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**கவனத்திற்கொள்க.**- சிலவேளை பாடநெறிக்காக இணைத்துக்கொள்ளக்கூடிய எண்ணிக்கையை விட சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சின் உடன்பாட்டிற்கு அமைய எழுத்து மூலப் பரீட்சை நடாத்தாமல் நேர்முகப் பரீட்சையில் மாத்திரம் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

06. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறை :**

(i) வழங்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்க வேண்டும்.

(ii) கட்புலன் /செவிப்புலனற்ற /ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்களுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் இடதுபக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தினால் "கட்புலனற்ற/செவிப்புலனற்ற/ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரிகள்" எனக் குறிப்பிட வேண்டும்.

(iii) **பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்.**- பரீட்சைக் கட்டணமாக 900.00 ரூபா பணத்தை அருகாமையில் உள்ள தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக உள்ள கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும்.

2020.02.20 ஆந் திகதி தொடக்கம் 2020.03.20 ஆந் திகதி வரை சகல தபால் அலுவலகங்களிலும் இப்பற்றுச்சீட்டை வழங்குவதற்காக ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களத்தினால் தபால் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) **விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :**

(அ) விண்ணப்பப்படிவத்தையிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழு நேரம் - 2020" பாடநெறி எனக் குறிப்பிட வேண்டும்.

(ஆ) 2020.03.20 (Gazette Closing Date) ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டுச் சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(இ) சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை நிறுவனத் தலைவரால் விண்ணப்பதாரியின் சுய விபரக்கோவைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படின் கடமை விடுமுறை பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துவதற்கு இவ்விண்ணப்பப்படிவம் பயன்மிக்கதாக அமையும்.

(v) நேரசூசி மற்றும் அனுமதிப்பத்திரம் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுவதுடன் தமது அனுமதிப்பத்திரம் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் 07 நாட்களுக்கு முன்னர் கிடைக்காதபட்சத்தில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு அது தொடர்பாக கீழ்க் குறிப்பிடப்பட்ட தகவல்களுடன் அறிவித்தல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் :----.
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :----.
(இ) முகவரி :----.
(ஈ) பணம் செலுத்திய தபால் அலுவலகம் மற்றும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இலக்கம் :----.
(உ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட திகதி :----.
(ஊ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட அலுவலகம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம் :----.

(vi) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீண்டும் திருப்பிச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றியமைக்கப்படவோ மாட்டாது.

(vii) முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(viii) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சையின் போது தமது அடையாளத்தை செல்லுபடியாகும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(ix) உரிய பாடநெறியைத் தொடர்வதற்கு விண்ணப்பதாரர்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டதன் பின்னர் பல்கலைக்கழகத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

(x) தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரும் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என தெரியவரும் பட்சத்தில் அவ்வாறான பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுப்பதிலிருந்து இரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

07. **கற்கை விடுமுறை.**- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறியைத் தொடர்வதற்காக முழுமையான சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இதற்காக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள், தேசிய பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்களில் சேவையாற்றும் அதிபர் தரத்திலுள்ளவர்கள், ஆசிரியர்களின் கற்கை விடுமுறையினை கல்வி அமைச்சின் செயலாளரினாலும் ஏனைய விண்ணப்பதாரர்களின் கற்கை விடுமுறை மாகாணக் கல்விச் செயலாளர்களினாலும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

08. **பிணை முறி.**- பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின் அவர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ஒழுங்குவிதி முறைகளுக்கமைய குறிப்பிட்ட காலத்திற்கு திணைக்களத்தில் சேவையாற்றுவதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /கல்விச் செயலாளருடன் பிணை முறியில் கையொப்பமிட வேண்டும்.

09. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யாது உரிய கால எல்லைக்குள் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அக்கற்கை விடுமுறைக்காலத்திற்குள் அவருக்கு செலுத்தப்பட்ட முழுமையான சம்பளம் மற்றும் கொடுப்பனவு மீண்டும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

10. பாடநெறியைத் தொடரும் காலத்தில் மாணவர்களின் செயற்பாடுகள், நடத்தை, வரவு திருப்தியளிக்காத பட்சத்தில் அவர்கள் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை இருப்பின் சிங்கள மொழி வாசகங்களே செல்லுபடியாகும்.

என். எச். எம். சித்ராநந்த,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை,
2020, சனவரி 31.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

2020 ஆம் கல்வி ஆண்டுக்காக பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பித்தல்

| |
|---|
| |

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

| விண்ணப்பிக்கும் மொழி மூலம் (சிங்களம் /தமிழ்) | விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் (கொழும்பு / யாழ்ப்பாணம்) | விண்ணப்பிக்கும் பல்கலைக்கழகம் (கொழும்பு / பேராதனை ரஜரட்ட /யாழ்ப்பாணம்) கவனத்திற்கொள்க : விருப்புத் தேர்வு தொடர் ஒழுங்கின்படி பல்கலைக்கழகங்கள் இரண்டைத் தெரிவுசெய்க. |
|---|---|---|
| | | 1. |
| | | 2. |

01. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் (முதல் எழுத்துக்கள் முன்னால்) திரு./திருமதி/செல்வி :------------------------------------.
உ-ம் : Mr. A.B.C. SILVA

(ii) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----------------------------------------------.

02. (i) (அ) அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :------------------------------------.
(ஆ) அலுவலகத் தொலைபேசி இலக்கம் :-----------------------------------------------.

(ii) (அ) சொந்த முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :------------------------------------.
(ஆ) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :-----------------------------------------------.

(iii) சேவையாற்றும் பாடசாலை / நிறுவனத்தின் அமைவிடம் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :

| மாகாணம் | மாவட்டம் | வலயம் |
|---|---|---|
| | | |

(iv) நிறுவனத்தின் தன்மை (அரசாங்க பாடசாலை/தனியார் பாடசாலை /பிரிவெனா/ஏனையவை) ------.

03. (i) பிறந்த திகதி :
ஆண்டு :..................... மாதம் :..................... திகதி :...................

(ii) 2020.03.20 (Gazette Closing Date) ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :.................... மாதங்கள் :............... நாட்கள் :................

(iii) பால்: (ஆண் /பெண்) :----.

04. பட்டம் தொடர்பான விபரம் :

| பட்டம் | பல்கலைக்கழக பாடநெறியை பயின்ற காலம் (.......... தொடக்கம் .......... வரை) | பட்டம் பெற்ற ஆண்டு | பட்டம் செல்லுபடியாகும் தினம் | பட்டத்திற்கான பாடங்கள் | சித்தியின் தரம் | நிறுவகம் / பல்கலைக் கழகம் | பட்டம் (உள்வாரி / வெளிவாரி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

05. (i) (அ) இலங்கை தனியார் பாடசாலை ஆசிரியர் சேவைக்கு/ இலங்கை பிரிவெனா ஆசிரியர் சேவைக்கு/இலங்கை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஆ) இந்த சேவையில் கடமையைப் பொறுப்பேற்ற திகதி :----.

(இ) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) (அ) இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஆ) இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிர்வாக சேவையில் கடமையை பொறுப்பேற்ற திகதி :----.

(iii) பட்டத்திற்கு பின்னர் 2020.03.20 (Gazette Closing Date) ஆந் திகதியில் 4(v) இல் குறிப்பிடப்பட்ட உரிய சேவை/ சேவைகளில் சேவைக்காலம் :----.

(iv) 2020.03.20 (Gazette Closing Date) ஆந் திகதியில் 4(v) இல் காட்டப்பட்டுள்ள சேவை/சேவைகளில் முழுமையான சேவைக்காலம் :----.

06. தொழிற்பயிற்சி தொடர்பான விபரம் :

| பாடநெறியைத் தொடர்ந்த நிறுவகம் (ஆசிரிய கலாசாலை/ தேசிய கல்வியியற் கல்லூரி/ ஏனையவை) | பாடநெறி (பாடத்துறை) | நிறுவனத்தில் பாடநெறியை பயின்ற கால எல்லை | |
|---|---|---|---|
| | | திகதி தொடக்கம் | திகதி வரை |
| | | | |

07. பெற்றுக்கொண்ட கற்கை விடுமுறை தொடர்பான விபரங்கள் :

| கல்வி விடுமுறையின் இயல்பு (சம்பளத்துடன் கூடிய/ சம்பளமற்ற, தேசிய/ வெளிநாடு) | கல்வி விடுமுறை பெற்றுக்கொண்ட தற்கான காரணம் | எவ்வளவு காலப் பகுதிக் கானது | பிணைமுறிக் காலம் (........ ஆம் திகதி தொடக்கம் ........ ஆம் திகதி வரை) | பிணைமுறிக் காலப்பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா / இல்லையா என்பது தொடர்பாக பூர்த்தி செய்யப்படாதாயின் அதற்காக இன்னும் இருக்கும் காலப் பகுதியைக் குறிப்பிடுக) |
|---|---|---|---|---|
| | | | | |

**கவனத்திற்கொள்க :** இதற்கு முதல் பெற்றுக்கொண்டுள்ள கல்வி விடுமுறைகளுக்குரிய மேற்காட்டப்பட்டுள்ள அட்டவணையைப் பிழையில்லாமல் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதாகும்.

**குறிப்பு :** தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் தேசிய போதனாவியல் டிப்ளோமாப் பாடநெறியைப் பயிலும் கால எல்லை கற்கை விடுமுறையாகக் கருதப்படமாட்டாது.

08. (அ) விண்ணப்பதாரிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் உள்ளனவா? : ஆம்/இல்லை

(ஆ) அவ்வாறிருப்பின், அது தொடர்பான தகவல்கள் :-----.

09.

| | |
|---|---|
| தபால் அலுவலகத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். | ................... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இலக்கம் ................ இன் கீழ் ...................... தபால் / உப தபால் அலுவலகத்திற்குரூபா ............. (எழுத்தில்) செலுத்தப்பட்டதனை உறுதி செய்கிறேன்.<br><br>விண்ணப்பதாரியின் கையொப்பம் :----.<br>திகதி :----. |

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதும் உண்மையானதும் என்றும் 2020.02.20 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய எனக்கு இப்பாடநெறியைத் தொடர்வதற்காக தகைமை உள்ளது என்றும் பரீட்சை சட்டக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்குவதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி செல்லுபடியாகும் பற்றுச்சீட்டை இணைத்துள்ளதாகவும் இத்தால் உறுதி செய்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. பாடநெறிக்காக நிறுவகத்திலிருந்து விடுவிப்பதற்கான பரிந்துரை :
(அதிபர், தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, நிறைவேற்று அதிகாரி, நிர்வாக சபை முகாமையாளர் அல்லது திணைக்களத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் கட்டாயமானதாகும்.)

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தொழிற்பயிற்சிப் பாடநெறியை தொடரும் தேவையை கருத்திற்கொண்டு இந்த விண்ணப்பதாரியை சேவையிலிருந்து விடுவிக்கிறேன் /சேவையிலிருந்து விடுவிக்கவில்லை.

----,
அதிபரின் /நிறுவகத் தலைவரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

12. பாடநெறிக்கு ஆசிரியரை விடுவிப்பது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு:

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியை தொடர்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அதற்கு கல்வி விடுமுறை வழங்குவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/சிபாரிசு செய்யவில்லை.

----,
வலயக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

02-500

## சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு

### இலங்கை தாதியர் சபைக்கு அடுத்த 05 வருட காலத்திற்கு புதிய அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்கான வேட்புமனுக்கள் கோரல்

1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை தாதியர் சபைச்சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாதியர் சபை (திருத்திய) சட்டமும் 2018, இலக்கம் 01 எனும் இலங்கை தாதியர் சபை (சபை அங்கத்தவர்களில் பட்டப்பின்பட்ட தகைமைகள்) அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வகுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி இலங்கை தாதியர் சபைக்கு அடுத்த 05 வருட காலத்திற்கு புதிய அங்கத்தவர்களை தெரிவு செய்து நியமிப்பதற்கு இத்தால் வேட்புமனுக்கள் கோரப்படுகின்றன. அத்துடன் 2017.07.21 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தாதியர் சபைக்கு அடுத்த 05 வருட காலத்திற்கு புதிய அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்கான வேட்புமனுக்கள் கோருவதற்கான அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

01. வேட்புமனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் ஊடாக மாத்திரம் வேட்புமனு சமர்ப்பித்தல் வேண்டும்.

02. இந்த தேர்தல் தொடர்பான விடயங்கள் ஒழுங்குபடுத்தல் சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) தலைமையிலான “இலங்கை தாதியர் சபைக்கான தேர்தல் குழு” ஊடாக மேற்கொள்ளப்படும்.

03. எல்லா வேட்புமனுக்களும் 2020, மாச்சு மாதம் 06 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் மாத்திரம் அனுப்பிவைத்தல் வேண்டும். வேட்புமனுக்கள் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் முனையில் “இலங்கை தாதியர் சபைக்கான வேட்புமனு” என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர்,
இலங்கை தாதியர் சபையின் தேர்தல் குழு,
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) கிளை,
சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சு,
சுவசிறிபாய,
385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.

04. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதிவு செய்யாத விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அல்லது பூரணப்படுத்தாத குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் வேட்புமனுப்பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

05. எல்லா வேட்புமனுக்களும் இது சம்பந்தமாக ஆர்வம் செலுத்துகின்ற யாவரும் பரிசீலனைக்காக 2020, மாச்சு 11 ஆந் திகதி மு. ப. 10.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை தலைவர்/இலங்கை தாதியர் சபைக்கான தேர்தல் குழு அலுவலகத்தில் (சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் அபிவிருத்தி பிரிவில்) பார்வைக்கு வைக்கப்படும்.

06. வேட்புமனுக்கான எதிர்ப்புக்கள் 2020, மாச்சு 12 ஆந் திகதி மு. ப. 9.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை தலைவர்/ இலங்கை தாதியர் சபைக்கான தேர்தல் குழு, சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சிற்கு எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். வேட்புமனுக்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றையும் கவனத்திற் கொண்டு 2020, மாச்சு 12 ஆந் திகதி பி. ப. 4.00 மணிக்கு தலைவர்/இலங்கை தாதியர் சபைக்கான தேர்தல் குழு அலுவலகத்தில் (சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் அபிவிருத்தி பிரிவில்) பார்வைக்கு வைக்கப்படும்.

07. தேர்தல் நடைபெறும் இடம், தினம் மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

08. தாதியர் சபை தேர்தலுக்காக வாக்களிக்க தகுதி பெறுவது, வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள தாதி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஆகும். அப்பெயர் பட்டியலை தாதியர் சபை அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

8.1 அப்பெயர் பட்டியல் 2020.01.31 ஆந் திகதி வரை இலங்கை தாதியர் சபையில் பதிவு செய்யப்பட்ட தாதி உத்தியோகத்தர்கள், இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட தாதி உத்தியோகத்தர்கள், சேவையில் உள்ளனர் என சான்றுறுதி செய்து நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பெயர் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட தாதி உத்தியோகத்தர்களின் பெயர்களும் உள்வாங்கப்பட்டு அப்பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

09. இலங்கை தாதியர் சபைக்கு அடுத்த 05 வருட காலத்திற்கு புதிய அங்கத்தவர்களை தெரிவு செய்தல் கீழுள்ளவாறு மேற்கொள்ளப்படும்.

09.1 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தாதியர் சபை சட்டம் மற்றும் அச்சட்டத்தின் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை தாதியர் சபை (திருத்தம்) சட்டத்தின் 3 ஆவது அத்தியாயத்தில் II ஆவது உப அத்தியாயம் மற்றும் இலக்கம் 2090/18 எனும் 2018.09.27 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தயாரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 2 (அ) இன் ஒழுங்குவிதிகளின் படி தாதி நிர்வாகம் தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு தகைமைகளை கொண்டவர்களும், தாதியர் நிர்வாகம் சம்பந்தமாக 05 வருட அனுபவத்துடன் 12 வருடத்திற்கு குறையாத காலம் தாதியர் சேவைத்துறையில் அனுபவம் கொண்டவரும், இலங்கை தாதியர் சபையில் அல்லது இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்தவரும், சுகாதார அமைச்சில் மற்றும் மாகாண அரச சேவையில் தாதியர் சேவை (வைத்தியசாலை) இல் உள்ள உத்தியோகத்தர்களில் விஷேட தரம் மற்றும் I ஆம் வகுப்பு (வைத்தியசாலை சேவை) தாதி உத்தியோகத்தர்களில் ஒருவர்.

எனினும், மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை இலக்கம் 2 (அ) இன் படி குறித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு தகைமைகளை கொண்டுள்ள எவரும் வேட்புமனுக்கள் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில், இலக்கம் 2090/ 18 எனும் 2018.09.27 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தயாரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 2 (ஆ) இன் ஒழுங்குவிதிகளின் படி உயர் கற்கை தாதியர் கல்லூரியினால் வழங்கப்படும் வைத்தியசாலை வாட்டு முகாமைத்துவம் தொடர்பாக டிப்ளோமா அல்லது இலங்கை தாதியர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு சமமான பிற தகைமைகள் பட்டப்பின்பட்ட தகைமைக்கான பதிலீடாக எடுத்துக்கொள்ளப்படும்.

09.2 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தாதியர் சபை சட்டம் மற்றும் அச்சட்டத்தின் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை தாதியர் சபை (திருத்தம்) சட்டத்தின் 3 ஆவது அத்தியாயத்தில் III ஆவது உப அத்தியாயம் மற்றும் இலக்கம் 2090/18 எனும் 2018.09.27 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தயாரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 2 (அ) இன் ஒழுங்குவிதிகளின் படி தாதி நிர்வாகம் தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு தகைமைகளை கொண்டவர்களும், 12 வருடத்திற்கு குறையாத காலம் தாதியர் கல்லூரியில் கற்பித்தலில் அல்லது நிர்வாகத்தில் அனுபவம் கொண்டவரும், மற்றும் இலங்கை தாதியர் சபையில் அல்லது இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்தவரும், சுகாதார அமைச்சில் தாதியர் கல்விப் பிரிவில் விஷேட தரம் மற்றும் I ஆம் வகுப்பு தரத்தில் சேவையாற்றும் தாதி உத்தியோகத்தர்களில் ஒருவர்.

எனினும், மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை இலக்கம் 2 (அ) இன் படி குறித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு தகைமைகளை கொண்டுள்ள எவரும் வேட்புமனுக்கள் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில், இலக்கம் 2090/ 18 எனும் 2018.09.27 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக

தயாரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 2 (ஆ) இன் ஒழுங்குவிதிகளின் படி உயர் கற்கை தாதியர் கல்லூரியினால் வழங்கப்படும் கற்பித்தல் மற்றும் கண்காணிப்பு தொடர்பான டிப்ளோமா அல்லது இலங்கை தாதியர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு சமமான பிற தகைமைகள் பட்டப்பின்பட்ட தகைமைக்கான பதிலீடாக எடுத்துக்கொள்ளப்படும்.

09.3 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தாதியர் சபை சட்டம் மற்றும் அச்சட்டத்தின் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை தாதியர் சபை (திருத்தம்) சட்டத்தின் 3 ஆவது அத்தியாயத்தில் IV ஆவது உப அத்தியாயம் மற்றும் இலக்கம் 2090/ 18 எனும் 2018.09.27 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தயாரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 2 (அ) இன் ஒழுங்குவிதிகளின் படி குறித்துரைக்கப்பட்ட பட்டப்பின்பட்ட தகைமை கொண்டவர்களும், பொது சுகாதார தாதியியல் துறையில் 12 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் கொண்டவர்களும், மற்றும் இலங்கை தாதியர் சபையில் அல்லது இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்தவரும், சுகாதார அமைச்சில் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பொது சுகாதார பிரிவில் விஷேட தரம் மற்றும் I ஆம் தர தாதி உத்தியோகத்தராக சேவையில் உள்ள பெண் தாதி உத்தியோகத்தர்களில் ஒருவர்.

எனினும், மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை இலக்கம் 2 (அ) இன் படி குறித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு தகைமைகளை கொண்டுள்ள எவரும் வேட்புமனுக்கள் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில், இலக்கம் 2090/ 18 எனும் 2018.09.27 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தயாரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 2 (ஆ) இன் ஒழுங்குவிதிகளின் படி உயர் கற்கை தாதியர் கல்லூரியினால் வழங்கப்படும் பொது சுகாதார தாதியியல் தொடர்பான டிப்ளோமா அல்லது இலங்கை தாதியர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு சமமான பிற தகைமைகள் பட்டப்பின்பட்ட தகைமைக்கான பதிலீடாக எடுத்துக்கொள்ளப்படும்.

09.4 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தாதியர் சபை சட்டம் மற்றும் அச்சட்டத்தின் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை தாதியர் சபை (திருத்தம்) சட்டத்தின் 3 ஆவது அத்தியாயத்தில் V ஆவது உப அத்தியாயம் மற்றும் இலக்கம் 2090/ 18 எனும் 2018.09.27 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தயாரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 2 (அ) இன் ஒழுங்குவிதிகளின் படி குறித்துரைக்கப்பட்ட பட்டப்பின்பட்ட தகைமை கொண்டவரும், மாகாண நிர்வாக சேவையில் உள்ளவரும், 12 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவம் கொண்டவரும், மற்றும் இலங்கை தாதியர் சபையில் அல்லது இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்தவருமான சேவையில் உள்ள தாதி உத்தியோகத்தர்களில் ஒருவர்.

எனினும், மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை இலக்கம் 2 (அ) இன் படி குறித்துரைக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு தகைமைகளை கொண்டுள்ள எவரும் வேட்புமனுக்கள் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில், இலக்கம் 2090/ 18 எனும் 2018.09.27 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தயாரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 2 (ஆ) இன் ஒழுங்குவிதிகளின் உயர் கற்கை தாதியர் கல்லூரியினால் வழங்கப்படும் கற்பித்தல் மற்றும் கண்காணிப்பு தொடர்பான டிப்ளோமா அல்லது பொது சுகாதார தாதியியல் தொடர்பான டிப்ளோமா அல்லது வைத்தியசாலை முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு தொடர்பான டிப்ளோமா அல்லது இலங்கை தாதியர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு சமமான பிற தகைமைகள் பட்டப்பின்பட்ட தகைமைக்கான பதிலீடாக எடுத்துக்கொள்ளப்படும்.

09.5 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தாதியர் சபை சட்டம் மற்றும் அச்சட்டத்தின் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை தாதியர் சபை (திருத்தம்) சட்டத்தின் 3 ஆவது அத்தியாயத்தில் VII ஆவது உப அத்தியாயத்தின்படி குறைந்த பட்சம் 05 வருட தொழில் அனுபவம் கொண்ட இலங்கை தாதியர் சபையில் அல்லது இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்தவரும், சேவையில் இருப்பவரும், சுகாதார அமைச்சில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பதவிநிலை தாதி ( III, II, I மற்றும் அதி தரத்தில்) உத்தியோகத்தர்களுள் ஐந்து (05) பேர்.

09.6 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தாதியர் சபை சட்டம் மற்றும் அச்சட்டத்தின் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை தாதியர் சபை (திருத்தம்) சட்டத்தின் 3 ஆவது அத்தியாயத்தில் XVI ஆவது உப அத்தியாயத்தின்படி ஆயுர்வேத திணைக்களத்திலும், மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சேவையில் உள்ள, இலங்கை தாதியர் சபையில் அல்லது இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த தாதி உத்தியோகத்தர்களில் ஒருவர்.

09.7 1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தாதியர் சபை சட்டம் மற்றும் அச்சட்டத்தின் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை தாதியர் சபை (திருத்தம்) சட்டத்தின் 3 ஆவது அத்தியாயத்தில் XVII ஆவது உப அத்தியாயத்தின்படி தனியார் வைத்தியசாலைகளில் சேவையாற்றும், இலங்கை தாதியர் சபையில் அல்லது இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த தாதி உத்தியோகத்தர்களில் ஒருவர்.

10. (i) ஒரு உறுப்பினர் (01) மாத்திரம் தெரிவு செய்யப்பட வேண்டிய துறைக்கு வாக்களிப்பதற்கு உரிய துறைசார் தாதியர்களுக்கு ஒரு வாக்கு மாத்திரம் உண்டு.

(ii) மேற்படி 9.5 இல் உறுப்பினர்கள் ஐந்து (05) பேரை தேர்ந்தெடுப்பதற்கு குறித்த தகைமைகள் கொண்ட வாக்காளர் ஒருவருக்கு உயர்ந்த பட்சம் 05 வேட்பாளருக்கு தமது வாக்குகளை வழங்குவதற்கு உரிமையுண்டு.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதாவது முரண்பாடுகள் காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தல் சரியானதாக கருதப்படும்.

செயலாளர்,
சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சு.

## சுகாதார மற்றும் சுதேச வைத்தியச் சேவைகள் அமைச்சு

*1988 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை தாதியர் சபைச்சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாதியர் சபை (திருத்திய) சட்டத்தின் ஊடாக வகுக்கப்பட்ட இலக்கம் 2090/ 18 மற்றும் 2018.09.27 ஆந் திகதிய கட்டளை 2018 இலக்கம் 01 எனும் இலங்கை தாதியர் சபை (சபை அங்கத்தவரின் பட்டப்பின்பட்ட தகைமை) இன் கீழுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக அடுத்த 05 ஆண்டுக்கு இலங்கை தாதியர் சபையில் உறுப்பினராக நியமனம் பெறுவதற்கான வேட்புமனுப்பத்திரம்.*

கீழ்க்குறித்த விபரங்களையுடைய நான் இலங்கை தாதியர் சபையின் உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு எனது விருப்பத்தை இத்தால் தெரிவிப்பதுடன், இதற்கான எனது வேட்புமனுவை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

விண்ணப்பிக்கும் பிரிவு

| | | |
|---|---|---|
| 9.1 | வைத்தியசாலை சேவை | |
| 9.2 | தாதியர் கல்வி | |
| 9.3 | பொது சுகாதாரம் | |
| 9.4 | மாகாண நிர்வாகம் | |
| 9.5 | பதவிநிலை தாதியர்/தாதி உத்தியோகத்தர் (III, II, I மற்றும் அதி தரம்) | |
| 9.6 | ஆயுர்வேத | |
| 9.7 | தனியார் | |

**குறிப்பு** : தயவு செய்து விண்ணப்பிக்கும் பிரிவுக்கு உரித்தான கூட்டில் ✓ அடையாளமிடவும்.

01. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :----.

02. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

03. நிரந்தர முகவரி :----.

04. தற்போது சேவையாற்றும் முகவரி :----.

05. நிரந்தர முகவரி :----.

06. தற்போது வகிக்கும் தரம்/ பதவி நிலை :----.

07. தற்போது வகிக்கும் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.

08. தாதியராக இலங்கை தாதியர் சபையில் பதிவு செய்த பதிவிலக்கம் மற்றும் திகதி :----.

09. தாதியராக இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த பதிவிலக்கம் மற்றும் திகதி :----.

10. தாதியர் சேவைக்கு முதல் நியமனம் பெற்ற திகதி :----.

11. உயர் கற்கை தாதியர் பயிற்சி நெறியை பூரணப்படுத்திய திகதி (பொருத்தமாயின் மாத்திரம்) :----.

12. பெற்றுள்ள பட்டப்பின்பட்ட தகைமை (பொருத்தமாயின் மாத்திரம்) :----.

13. பட்டப்பின்பட்ட தகைமை பெற்றுக்கொண்ட பல்கலைக்கழகம்/ நிறுவனம் (பொருத்தமாயின் மாத்திரம்) :----.

14. பட்டப்பின்பட்ட தகைமை பெற்ற திகதி (பொருத்தமாயின் மாத்திரம்) :----.

15. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

16. தாதியர் பயிற்சிக்கு உள்வாங்கப்பட்ட திகதியும், தாதியர் பாடசாலையும் :----.

17. கல்வி மற்றும் தொழிற்தகைமைகள் :----.

(இலங்கை தாதியர் சபையில் அல்லது இலங்கை மருத்துவ சபையில் தாதியராக பதிவு செய்த சான்றிதழின் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்படப்பிரதியொன்று/ பட்டப்பின்பட்ட தகைமை பெற்றிருப்பின் பட்டப்பின்பட்ட சான்றிதழின் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்படப்பிரதியொன்று/ பட்டப்பின்பட்ட தாதியர் பயிற்சி, வாட்டு முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு/ கற்பித்தல் மற்றும் கண்காணிப்பு/ பொது சுகாதார தாதியியல் பயிற்சி தொடர்பான டிப்ளோமா சான்றிதழின் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்படப்பிரதியொன்று விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.)

### வேட்புமனு பிரேரணையும் ஆமோதித்தலும்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி .......................................... இன் சேவை பிரிவிற்கான வேட்புமனு பத்திரம் இத்தால் பிரேரித்து ஆமோதிக்கின்றோம்.

| பிரேரித்தவர் | ஆமோதித்தவர் |
|---|---|
| பெயர் :.................... | பெயர் :.................... |
| தரம் :........................ | தரம் :........................ |
| சேவை பிரிவு :.......................... | சேவை பிரிவு :.......................... |
| தாதி (வைத்தியசாலை சேவை)/(தாதி கல்வி)/(தாதி பொது சுகாதாரம்)/ மாகாண நிர்வாகம், பதவிநிலை தாதியர்/ ஆயுர்வேத/தனியார்) | தாதி (வைத்தியசாலை சேவை)/(தாதி கல்வி)/(தாதி பொது சுகாதாரம்)/மாகாண நிர்வாகம், பதவிநிலை தாதியர்/ஆயுர்வேத/தனியார்) |
| பதவி :........................ | பதவி :........................ |
| சேவை நிலையம் :........................... | சேவை நிலையம் :........................... |
| தாதியர் சபையில் பதிவு செய்த இலக்கமும், | தாதியர் சபையில் பதிவு செய்த இலக்கமும், |
| திகதியும் ................ | திகதியும் ................ |
| மருத்துவ சபையில் பதிவு செய்த இலக்கமும், | மருத்துவ சபையில் பதிவு செய்த இலக்கமும், |
| திகதியும் .................... | திகதியும் .................... |
| திகதி :............. ............................... பிரேரித்தவரின் கையொப்பம் | திகதி :............ ............................... ஆமோதித்தவரின் கையொப்பம் |

(இலங்கை தாதியர் சயில் அல்லது இலங்கை மருத்துவ சபையில் தாதியராக பதிவு செய்த சான்றிதழின் நிழற்பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.)

மேலே குறிப்பிடப்பட்ட சகல விபரங்களும் உண்மையானதும், சரியானதும் என இத்தால் உறுதியுரைப்பதுடன் பிழையானதும், பொய்யானதுமான தகவல்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் எனது வேட்புமனு நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிவேன்.

----------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தேர்தல் குழுவின் உபயோகத்திற்கு :**

வேட்புமனு பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ நிராகரிக்கப்பட்டது.
காரணம் :
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................

---------------,
தலைவர்,
இலங்கை தாதியர் சபையின் தேர்தல் குழு.

திகதி :-----.

2-608

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2020

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2020.03.05 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி. ப. 2.05 மணிக்குத் திறக்கப்படும்.

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| தென் மாகாணம் | அம்பாந் தோட்டை | திஸ்ஸ மஹாராம | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், காலி. | திஸ்ஸமஹாராம நகருக்கு அருகில் | 2020.03.13 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தபட்சம் மூன்று வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியும் அத்துடன் வாகனத் தரிப்பிட வசதியும் இருத்தல் வேண்டும். அதிகாரிகள் 10 பேருக்கு போதுமான அறைகள் கொண்ட இடவசதி இருத்தல் வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2020.03.05 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

எஸ். டீ. பீ.ஜே. தம்பேகம,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 5,
2020.02.03.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்குக் கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2020**
**விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம்**

**கட்டிட உரிமையாளரின்:**

01. முழுப்பெயர் :----.
02. முகவரி :----.
03. தொலைபேசி இலக்கம் :----.
04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது? ----.
02. மாதாந்த வாடகைத் தொகை ? ----.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி: ----.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ : ----.
05. இடத்தின் விஸ்தீரணம் : ----.
06. கட்டிடத்தின் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :----.
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில் /கம்பி வேலி/. . . . . . ): ----.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை : ----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

2- 440

---

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : Tritech Services & Solutions (Private) Limited
கம்பனியின் இலக்கம்: PV 00210827
திகதி : 2019.05.06
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : 238, மஹரகம ரோட், பொரலெஸ்கமுவ, மஹரகம

நிறுவன இயக்குநர்.

2019, ஓகத்து 22.

2- 409

---

**அறிவித்தல்**

மெர்சன்ட் சொலூஷன்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் என்ற பெயர் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் ஃபைசர்வ் லங்கா ( பிரைவட்) லிமிட்டட் எனத் திருத்தம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி முதல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் முன்னைய பெயர் : மெர்சன்ட் சொலூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம்: பீவீ 61342
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 116/10, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 7
கம்பனியின் புதிய பெயர்: ஃபைசர்வ் லங்கா ( பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் செயலாளர்கள்: சென்ட்ரல் கோபரேட் என்ட் கன்சல்டிங் சர்விஸஸ் (பிரைவேட்) லிமிடட் இல. 116/10, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு-10

2- 411

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

சிங்கப்பூரில் சட்டபூர்வமாக (ப.சே.இல. 201204471 W) பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகம் 5சீ,டோ குஹான் வீதி, (Toh Guan) கிழக்கு சிங்கப்பூர், 608828 அமைந்துள்ள மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பதிவு செய்யப்பட்டுள்ள லெவல் -12, பார்க் பில்டிங், இல. 33, பார்க் வீதி, கொழும்பு -02 என்ற இடத்தில் அமைந்துள்ளதும் அதன் கிளைகள் Nippon Express (தெற்கு ஆசியா மற்றும் ஓசினியா (Oceania) தனி. நிறுவனம் (ப.செ.இல. 201204471 W ) தனி இயக்குனர் ஆகிய சிஞ்ஜீரோ டகீசோ (Shinjiro Takezoe) ( தற்போது 11 யுனிட்டி ஸ்ரீட் # 06-20 ரொபட்சன் வொக் சிங்கப்பூர் 237995) இல் வசிக்கும் நான் 2016, யூலை மாதம் 11 ஆந் திகதி எல். குப்பான்செட்டி பிரசித்த நொத்தாரிசு சிங்கப்பூரில் சான்றுப்படுத்தப்பட்ட கொழும்பு 2, பார்க் வீதி, இல. 33, பார்க் கட்டிடம் # 1229, லெவல் -12 இல் வசிக்கும் மசாஓ உமெமொடோ ( Masao Umemoto) என்ற நபருக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை 2019,ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி முதல் பயனற்றதாக்கி சட்டரீதியாக இரத்துச் செய்வதாக இதன் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிற்கும் அதன் வாழ் பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிஞ்ஜீரோ டகீசோ (Shinjiro Takezoe).

2- 361

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கம்பஹா, கல்யாணி வீதி, இலக்கம் 35/ 4 ஐச் சேர்ந்த ஜீவனி துசாரா குமாரி அமரசேகர ஆகிய நான், சட்டத்தரணி, ராஜிதா பிரசான்தி குலதுங்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேலதிக உதவிப் பதிவாளர் நாயகத்தினால் எழுத்து மூல அதிகாரங்கள் பராமரிக்கப்படும் புத்தகத்தில் கம்பஹா பதிவாளர் அலுவலகத்தில் 2015.11.18 ஆந் திகதியன்று பதிப்பு 53, பக்கம் 4, பதிவு 26270 இல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் 2851 மற்றும் 2015.10.16 ஆந் திகதியுடையதும் இலக்கம் 35/4, கல்யாணி வீதி, கம்பஹா சித்ரா எலன் மென்டிஸ், ( உரிமையாளர்- தே.அ.அ.இலக்கம் 436062451V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜீவனி துசாரா குமாரி அமரசேகர.

2020.01.22.

2-367

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கம்பஹா, கல்யாணி வீதி, இரண்டாம் ஒழுங்கை, இலக்கம் 35/4 ஐச் சேர்ந்த திலினி பிரபா குமாரி அமரசேகர ஆகிய நான், சட்டத்தரணி, ராஜித பிரசான்தி குலதுங்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேலதிக உதவிப் பதிவாளர் நாயகத் தினால் எழுத்து மூல அதிகாரங்கள் பராமரிக்கப்படும் புத்தகத்தில் கம்பஹா பதிவாளர் அலுவலகத்தில் 2015.11.18ஆந் திகதியன்று பதிப்பு 53, பக்கம் 4, பதிவு 26269 இல் பதிவு செய்யப்பட்ட இலக்கம் 2852 மற்றும் 2015.10.16 ஆந் திகதியுடையதும் இலக்கம் 35/4, கல்யாணி வீதி, கம்பஹா சித்ரா எலன் மென்டிஸ், ( உரிமையாளர்- தே.அ.அ.இலக்கம் 436062451V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

திலினி பிரபா குமாரி அமரசேகர.

2020, சனவரி 14.

2-368

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

வெயங்கொடை, நைய்வள, சனச நகர் , 89/37ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் 562936643V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய இராமநாயக்க பத்திரன்னேஹெலகே சுசில் ஷாந்த ஆகிய நான், வெளிநாட்டில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2017.07.12 ஆந் திகதியிடப்பட்டு பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் எழுத்து மூலம் அதிகாரம் பெற்றவர்கள் மற்றும் விஷேட அற்றோணித்தத்துவப் புத்தகத்தில் 30 ஆம் பாகம், 1795 ஆம் இலக்க நாட்புத்தககத்தின் 65 ஆம் இலக்கத் தாளில் பதிவு செய்யப்பட்டவாறு கூறப்பட்ட இலங்கை குடியரசின் வெயங்கொட,கும்பலொலுவ, 315/ஏ என்ற இலக்கத்தைச் சேர்ந்தவரும் 622772833V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய இராமநாயக்க பத்திரன்னேஹெலகே நில் பிரேமரத்ன என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதுமாகிய விஷேட அற்றோணித்தத்துவமானது என்னால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதெனவும் இந்த திகதி முதற்கொண்டு மேற் கூறப்பட்டுள்ள இராமநாயக்க பத்திரன்னேஹெலகே நில் பிரேமரத்ன என்பவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

இராமநாயக்க பத்திரன்னேஹெலகே சுசில் ஷாந்த.

2020, சனவரி 14.

2-384

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

புத்தளம் மாவட்டம், கடுனேரிய அஞ்சல் சேவைப் பகுதியில் பஹல கடுனேரிய, சிலாபம் வீதி, இல. 97 எனும் முகவரியில் வசிக்கும் பொருதொடகே ஸ்டான்லி பிரணாந்து ஆகிய நான், கடுனேரிய "சிசில" எனும் முகவரியில் வசிக்கும் டபிள்யூ. ஐ.ஏ.ஆர். பிரணாந்து பிரசித்த நொத்தாரிசு என்பவரால் 2018.02.19 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 1336 கொண்ட பத்தரமுல்லையில்

அமைந்துள்ள பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் பிரதான அலுவலகத்தில் அற்றோணித் தத்துவப் புத்தகத்தில் தொகுதி 226, பக்கம் 29, நாட்குறிப்பு 3147 எனும் இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்றோணி தத்துவத்தில் கடுனேரிய அஞ்சல் சேவைப் பகுதியில் பஹல கடுனேரிய , இல. 97 எனும் முகவரியில் வசிக்கும் தெரேஸ் கான்தி தபரேரா என்பவரை எனது சட்டபூர்வ அற்றோணி தத்துவக்காரராக நியமித்திருந்தேன் என்பதோடு, அந்த அற்றோணித் தத்துவம் இன்று முதல் செல்லுபடியற்றதாக்கப்பட்டு வலிதற்றதாக்கப்பட்டுள்ளது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் அறியத்தருகின்றேன். அதன்படி, மேலே கூறப்பட்ட அற்றோணி தத்துவத்தை பயன்படுத்திக்கொண்டு மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளும் செல்லு படியற்றவை வலுவற்றவை என இத்தால் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

போருதொடகே ஸ்டான்லி பிரணாந்து.

2-407

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிலான, மொரகல சந்தி , கண்கானம்கேவத்தவில் வதியும், தினுஷா ரணதுங்க ( தே.அ.அ.இல. 866453551V) ஆகிய நான், காலி, சீனகொரட்டுவ, இலக்கம் 10 இல் வதியும் முனசிங் பத்திரன பல்லியகே தீக்ஷண நவீன் மதுஷங்கவிற்கு (தே.அ.அ.இல. 873522062V) வழங்கிய பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜயந்தி ஹேனகொட வித்தானாச்சி மூலம் 2019.02.04 ஆந் திகதியன்று எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 2042 கொண்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழித்ததாக இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன். இது முதற்கொண்டு முனசிங் பத்திரன பல்லியகே தீக்ஷன நவீன் மதுஷங்க எனது சார்பாக மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கை அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக இருக்க மாட்டேன் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

தினுஷா ரணதுங்க.

2-412

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : ஒப்பஸ் சென்டா லங்கா ( பீவீஉ) எல்டீடி
பதிவிலக்கம்: பீவீ 00206281
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 18D, அத்துல்கோட்டே வீதி, மெயின் ஸ்ட்ரீட், பத்தரமுல்லை.
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2018.11.14

கம்பனிச் செயலாளர்.

2- 612

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹக்மன, கங்கொடகம, "சமன்" இல. 15/2 எனும் முகவரியில் வசிக்கும் லொகு முனசிங்ஹகே ரோஹித சமன் குமார (தே.அ.அ.இல.840960498V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு நிலங்க செனெவிரத்ன என்பவரால் எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட இல. 1813 மற்றும் 2019.08.16 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தினால் , புஹுல்வெல்ல, வலகந்த, "பிரியங்கர" எனும் முகவரியில் வசிக்கும் ஹேவா கங்கானமகே சுரங்கி நதீஷானி ( தே.அ.அ.இல. 858480388V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை 2020.02.20 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

லொகு முனசிங்ஹகே ரோஹித சமன் குமார

2- 458

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பத்தரமுல்லை, தலங்கம வடக்கு, முவன்ஹெலவத்த, இல. 648/12 ஐச் சேர்ந்த (தற்போது No.2,Sunkist way, Wallington, SM6 9LQ United Kingdom) என்னும் முகவரியில் குடியிருக்கும் ரோஹினீ சந்திரலதா வீரசிங்ஹ அல்லது நவசிவ முதியன்சேலாகே ரோஹினீ சந்திரலதா வீரசிங்ஹ ஆகிய நான், கம்பஹா பிரசித்த நொத்தாரிசு மற்றும் சட்டத்தரணி எம். வீ. ஹெட்டிகே என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அற்றோணித்தத்துவப் புத்தகத்தில் 222 ஆம் தொகுதி இருமடித்தாளில் 606 ஆம் நாளேட்டு இலக்கத்தின் கீழ் 2018.01.11 ஆந் திகதி செய்யப்பட்டுள்ள அற்றோணித்தத்துவத்தினால் ஶ்ரீ நவலோக விஹாரய, நவலோகபுர, சேதவத்த என்னும் முகவரியில் குடியிருக்கும் வண. பன்னல ஞானாலோக தேரர் என்பவரை எனது அற்றோணித்தத்துவகாரராக நியமித்ததை இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

இன்று முதல் குறிப்பிட்ட எனது அற்றோணித்தத்துவகாரரால் வண. பன்னல ஞானாலோக தேரர் மேற்கொள்ளும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

ரோஹினீ சந்திரலதா வீரசிங்ஹ அல்லது
நவசிவ முதியன்சேலாகே ரோஹினீ சந்திரலதா
வீரசிங்ஹ.

2- 459

---

# ஏல விற்பனைகள்

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் ஏலவிற்பனை அறிவித்தல்*

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கென்டி கலர் கோன் (பிரைவெட்) லிமிட்டெட் கடனாளியாகவும் சமரகோன் முதியன்சேலாகே கும்புரேகெதர பிரசன்ன மங்கல சமரகோன் மற்றும் சமரகோன் முதியன்சேலாகே கும்புரேகெதர அசேல சஞ்சீவ சமரகோன் ஆகியோர் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ்விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**1 ஆம் விற்பனை**

2020.03.16 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு

**ஆதனத்தின் விபரம்.-**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் குண்டசாலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 719, கோனவல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கோனவல கிராமத்தில் அமைந்துள்ள வெலிகொடபிட்டியே தேவாலேகாவஹேன தற்போது தோட்டம் மற்றும் வெலிகொடபிட்டியே சியம்பலாகஹமுலஹேன தற்போது தோட்டம் எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் J. அமரசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1025 ஆம் இலக்க 2007.10.14 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 4 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு.

அண்மையில் செய்யப்பட்ட அளவையின் பிரகாரம் மேற்கூறிய கோனவல கிராமத்தில் அமைந்துள்ள வெலிகொடபிட்டியே தேவாலேகாவஹேன தற்போது தோட்டம் மற்றும் வெலிகொடபிட்டியே சியம்பலாகஹமுலஹேன தற்போது தோட்டம் எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் T.B.S. சங்கரன்தெனிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 8663ஆம் இலக்க 2014.08.26 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 4 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 11.15 பேர்ச் பரப்பளவானது.

**2 ஆம் விற்பனை**

2020.03.16 ஆந் திகதி மு.ப.10.45 மணிக்கு

**ஆதனத்தின் விபரம்.-**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் குண்டசாலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 719, கோனவல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கோனவல கிராமத்தில் அமைந்துள்ள வெலிகொட பிட்டியே தேவாலேகாவஹேன தற்போது தோட்டம் மற்றும் வெலிகொடபிட்டியே சியம்பலாகஹ முல ஹேன தற்போது தோட்டம் எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் J. அமரசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1025 ஆம் இலக்க 2007.10.14 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 5 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு.

அண்மையில் செய்யப்பட்ட அளவையின் பிரகாரம் மேற்கூறிய கோனவல கிராமத்தில் அமைந்துள்ள வெலிகொடபிட்டியே தேவாலேகாவஹேன தற்போது தோட்டம் மற்றும் வெலிகொடபிட்டியே சியம்பலாகஹமுலஹேன தற்போது தோட்டம் எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் T.B.S. சங்கரன்தெனிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 8663ஆம் இலக்க 2014.08.26 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 5 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 01 றூட், 1.12 பேர்ச் பரப்பளவானது.

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் J. அமரசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1025 ஆம் இலக்க 2007.10.14 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 3 என அடையாளமிடப்பட்ட பாதையின் மீதும் ஊடாகவும் பாதை உரிமை உண்டு.

**ஆதனத்தை வந்தடைதல்:** கண்டி நகரத்திலிருந்து கண்டி மஹியங்கனை பாதையில் சுமார் 15 கி.மீ. தூரம் கும்புக்கந்துர பாதை சந்தி வரை வந்து வலது பக்கமாகத் திரும்பி கும்புக்கந்துர பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 15 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் எல்லையில் வலது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2019.07.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.07.31 ஆந் திகதிய "லக்பிம", "டேலி மிரர் " மற்றும் "தினக்குரல் " ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1500;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2000.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.-** "சிரேஷ்ட முகாமை யாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" தொலைபேசி இல. : 011-2661836, 011- 2661835, 011- 2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்,

இல. 369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட, கண்டி
தொலைபேசி : 081-2310595/071-8446374/071-4962449

2- 442

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ – ஹெட்டிபொல கிளை

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி )

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனைஅறிவித்தல்*

**விலைமதிப்புமிக்க சொத்து ஏலவிற்பனை**

அனுமதிபெற்ற நிலஅளவையாளர் இரந்ததிஸ்ஸ கொடபகே என்பவரால் தயாரிக்கப்பட்டு 2005.05.08 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இலக்கம் 1540A/2005 இல் லொட் இலக்கம் 02 இல் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட பூர்டன் தோட்டம் எனும் தம்பியகம வத்த காணி அக் காணியிலிருந்து கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்களாக வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தெவ்மெதிஹத்பத்துவ கிரதலன கோரளே, பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லைகக்குட்பட்ட, பண்டுவஸ்நுவர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட , தென்கொட கிராம அலுவலர் பிரிவின் தம்பியகம கிராமத்தில் அமைந்துள்ள லொட் இலக்கம் 01 எனும் காணி.

வடகிழக்கு: திட்ட எண் 1540A /2005 இன் லொட் இலக்கம் 01 மற்றும் ஹெட்டிபொலவிலிருந்து கோட்டாம்பபிட்டி வரை பிரதேச சபா சாலை- டோரதியகேதரா சாலை.
தென்கிழக்கு: ஆர். எம். தயா ஸ்ரியானிக்குச் சொந்தமான தம்பியாகம தோட்டம்.
தென்மேற்கு: ஏ. வென்டபூர்டனுக்குச் சொந்தமான பூர்டன் தோட்டம் மற்றும் 1540A /2005 திட்டத்தின் லொட் எண் 03 மூலம்.
வடமேற்கு: 1540A/ 2005 திட்டத்தின் லொட் எண் 01 மூலமாகவும் சூழப்பட்டுள்ளது.

குருநாகல் பிரசித்த நொத்தாரிசு டீ. ஆர். பீ. கால்லகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, மே மாதம் 25ஆந் திகதியிடப்பட்ட 3924 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கார்திவசம் பாலகே அஜித் குமார ஆரியதாச என்பவரால் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.**

**பிரவேசம்.-**ஹெட்டிபொல நகர மத்தியிலிருந்து வாரியபொலசாலையில் சுமார் 2.25 கிலோ மீற்றர் கோட்டாம்பபிட்டி சந்தி வரை சென்று வலதுபுறமாக நாரம்மல சாலைக்குத் திரும்பிச் சென்று அவ் வீதியில் சுமார் 1.1 கி.மீ. தொலைவிலுள்ள ஶ்ரீ சுனந்தாராம மாவத்தையில் வலதுபுறமாக சுமார் 1.75 கி.மீ. தூரம் பயணிக்கும் போது சொத்து இடதுபுறத்தில் அமைந்துள்ளது.

**தீர்மான அறிவிப்புகளுக்காக.-** 2019, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானி மற்றும் 2019, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:** ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% ( பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5 % (இரண்டரை சதவீதம் ) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்);
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள் வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெறமுடியும்.**- “உதவிப் பொது முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி, இல.479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10” உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661816/ தொலைநகல்: 011- 2661835.

டல்லஸ் செலாட்,
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 146/3,
கல்தேரா கார்டின்ஸ்,
கீழ் துட்டுகெமுனு தெரு,
கொஹுவலை.
தொலைபேசி இல.: 011- 4367467, 011-4367111.
மின்னஞ்சல் : aucslk@gmail.com

2- 449

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2020 இன் இல. 70

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. பீ. ஏ. சுசன்த அதுல குமார அவர்கள், 2020, சனவரி மாதம் 06 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/1

---

2020 இன் இல. 71

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. எஸ். டீ. ஜவுட் நிலுக்ஷன் அவர்கள், 2020, சனவரி மாதம் 07 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/2

---

2020 இன் இல. 72

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. கே. டீ. ஆர். ஒல்கா அவர்கள், 2020, சனவரி மாதம் 07 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/3

---

2020 இன் இல. 73

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. ஆர். எம். ஏ. ரத்நாயக்க அவர்கள், 2020, சனவரி மாதம் 07 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக திறைசேரி செயற்பாடுகள் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/4

---

2020 இன் இல. 74

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. ஆர். எச். டபிள்யு. ஏ. குமாரசிறி அவர்கள், 2020 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக தேசிய திட்டமிடல் திணைக் களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/5

---

2020 இன் இல. 75

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான செல்வி கே. ஜீ. கே. விமலவீர அவர்கள், 2020, சனவரி மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/6

---

2020 இன் இல. 76

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. டீ. ஏ. பி. அபேசேக்கர அவர்கள், 2020, சனவரி மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவியில் நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/7

---

2020 இன் இல. 77

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி எஸ். எச். டீ. களுதந்திரி அவர்கள், 2020, சனவரி மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/8

---

2020 இன் இல. 78

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. ஏ. விமுக்தி ஜனாதர அவர்கள், 2020 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/9

---

2020 இன் இல. 79

**நியமனம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க அவர்களும் இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. பி. அல்கம அவர்களும் 2020 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக திறைசேரியின் பிரதிச் செயலாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/10

---

2020 இன் இல. 80

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி ஜே. சீ. வெலிகமகே அவர்கள், 2020, சனவரி மாதம் 08 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/11

---

2020 இன் இல. 81

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. கே. ஏ. விமலேந்திரராஜா அவர்கள், 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக வர்த்தகம் மற்றும் முதலீட்டு

கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/12

---

2020 இன் இல. 82

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை திட்டமிடல் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த கலாநிதி (திரு.) எம். கே. சீ. சேனாநாயக்க அவர்கள், 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 27.

02- 383/13

---

2020 இன் இல. 83

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இளைப்பாறிய ரியர் அட்மிரல் பீ. ஏ. ஜீ. பீரிஸ் அவர்கள், ஒப்பந்த அடிப்படையில் 2019, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக ஒரு (01) வருட காலத்திற்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 31.

02- 475/1

---

2020 இன் இல. 84

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எஸ். ஆலோக்கபண்டார அவர்கள், 2020, சனவரி மாதம் 06 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 31.

02- 475/2

---

2020 இன் இல. 85

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. ஜே. எம். மங்களதிஸ்ஸ அவர்கள், 2020, சனவரி மாதம் 13 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 31.

02- 475/3

---

2020 இன் இல. 86

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த திரு. ஏ. பீ. எம். அஷ்ரப் அவர்கள், 2020, சனவரி மாதம் 14 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, சனவரி 31.

02- 475/4

---

2020 இன் இல. 87

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் திரு. நௌபல் அப்துல் ரஹ்மான் அவர்கள், ஒப்பந்த அடிப்படையில் 2019, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

எஸ். அமரசேக்கர,
அமைச்சரவைச் செயலாளர்.

2020, பெப்புருவரி 03.

02- 496

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்**
**25/26 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் ஆகிய திருத்தச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இலக்கமொன்றின் எதிரே காட்டப்பட்டுள்ள கடனாளி கடன்கொடுத்தவர் என்னும் இரு தரப்பினருக்குமிடையே இணக்கமொன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சியொன்றை மேற்கொள்வதற்கு கடன் இணக்க சபை எண்ணியுள்ளது.

இது சம்பந்தமாக இதன் கீழ்க் குறிப்பிட்டுள்ள கடனாளிகளிடமிருந்து தமக்கு அறவிடப்பட வேண்டியுள்ள கடன்களைப் பற்றிய கூற்றொன்றை தமக்கு வருகை தருவதற்கு அறிவிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் இச் சபையிடம் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவர்களுக்கு சட்டத்தின் 25(1) 26(1) பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சுபாஷினீ தயானந்த,
செயலாளர்,
கடன் இணக்க சபைத் திணைக்களம்.

கடன் இணக்க சபைத் திணைக்களம்,
இல. 35ஏ,
கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08.

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (01) 45098 | திருமதி ரங்ஹவடி கெதர இரேஷா மதுமாலி<br>பீ. 136/1,<br>குமாரபுர வீதி,<br>தெபத்கம,<br>கேகாலை. | திரு. தெலங்காவகே ஜயகொடி<br>தெபத்கம,<br>கேகாலை. |
| (02) 45292 | திருமதி வசந்தி முதுமால,<br>135/2,<br>தம்பேஆரகொட,<br>மொறகெட்டிஆர,<br>மேற்கு - நாக்குலுகமுவ. | திரு. விஜேதுங்க லியன பட்டபெந்திகே அனில் குமார<br>இல. 46,<br>கொஸ்கொரட்டுவ,<br>சீனிமோதர,<br>மேற்கு - நாக்குலுகமுவ |
| (03) 45264 | திருமதி ஸ்ரீனா பிரசாதினி ஜயசிங்க<br>58/42 எம்,<br>16 ஆம் ஒழுங்கை,<br>ஆனந்த பாலிகா மாவத்தை,<br>பாகொட, பிட்டகோட்டே. | திரு. அபேகோன் முதியன்சேலாகே வசந்த குமார,<br>1001/1, லியனகொட,<br>கட்டுகுருந்த வீதி,<br>கொட்டாவ, பன்னிபிட்டிய. |
| (04) 45266 | திரு. தொன் பிரபா இந்திரஜித் உபாலி மல்லிகாஆரச்சி<br>இல. 1120,<br>மதுகம வீதி,<br>நாகொட,<br>தொடம்கொட | திரு. வகவன் ஆரச்சிகே அசங்க பிரேமசந்திர<br>இல. 12/14 ஏ 1/1,<br>வஜிர வீதி,<br>கொழும்பு 04. |
| (05) 45261 | திருமதி மனிமெல்துர சாகரிகா பிரியதர்ஷனீ மெண்டிஸ்,<br>இல. 36,<br>உடுமுல்ல,<br>கனேகொட,<br>ரத்கம. | திரு. தேவசிங்க முதலிகே ருவன் பிரசன்ன<br>மொறொன்வியா சிட்டி,<br>ரனபனாதெனிய,<br>ரத்கம. |
| (06) 45256 | திருமதி சிம்பிய பதிரணகே சுனீதா<br>பிட்டதெனிய,<br>கொனாமுல்ல,<br>காலி | திரு. ரஞ்சித் கோட்டகே,<br>கினிவெல்ல,<br>கதலுவ,<br>அகங்கம. |
| (07) 45367 | (1) திரு. செனரத் குணசேகர விதானராலலாகே ஜீவன் சம்பத் குணசேகர,<br>இல. 453/சீ,<br>இகல உடுகம்பல, பெதியாகொட, கம்பஹா.<br>(2) திருமதி மெனேரிபிட்டியகே தொன் பிரிஜ்ஜெட் மாலனீ,<br>இல. 453/சீ,<br>இகல உடுமகம்பல<br>பெதியகொட, கம்பஹா | திரு. ராஜபக்ஷ பதிரன்னெஹெலாகே அஜித் நிஷாந்த<br>19/25<br>“சிறிதெரண வத்த”<br>பெதியாகொட<br>கம்பஹா. |
| (08) 45166 | திருமதி சியம்பலாபிட்டியகே துஷாரி பிரியதர்ஷனி பெரேரா,<br>ரணவிரு ஆரியரத்ன மாவத்தை,<br>தெற்கு தல்பிட்டிய,<br>வாத்துவ. | திருமதி மெஸ்டியகே தோன நில்மினி குணதிலக,<br>இல. 1/8,<br>இரண்டாம் புதிய மாவத்தை,<br>தெற்கு தல்பிட்டிய, வாத்துவ. |
| (09) 45225 | (1) திருமதி மெதகம விதானலாகே விமலசீலி மெனிகே,<br>கோம்பிட்டிய வீதி,<br>“வரல” கொடகவெல.<br>(2) திரு. எலபாத ஆரச்சிகே நிஹால் ஜயசூரிய,<br>கோம்பிட்டிய வீதி,<br>“வரல” கொடகவெல. | திரு. விக்கிரம ஆரச்சிலாகே சுமிந்த சாமர விக்கிரம ஆரச்சி,<br>621/எ7,<br>வேரஹெர வீதி,<br>கொடகவெல. |

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (10) 45251 | திரு. சிங்கன்குட்டி ஆரச்சிகே சுனில் ஹேமசிறி ஜயதிஸ்ஸ, இல. 374/எவ், மெதலந்த, தொம்பே. | திரு. திரௌபதி இன்வெஸ்ட்மன்ட் (பீவீரீ), எல். ரீ. டீ. கம்பனி, 401/4, தேகவத்த, தொம்பே. |
| (11) 45250 | திரு. சிங்கன்குட்டி ஆரச்சிகே சுனில் ஹேமசிறி ஜயதிஸ்ஸ, இல. 374/எவ், மெதலந்த, தொம்பே. | திரு. திரௌபதி இன்வென்ஸ்ட்மன்ட் (பி. வீ. ரீ.) எல். ரீ. டி. கம்பனி, 401/4, தேகவத்த, தொம்பே. |

02-441

---

**பதிவாளர் நாயகத் திணைக்களம்**

பதிவு செய்தல் ஆ 97
(F2 ) 2/64

**திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக தேவாலயங்களைப் பதிவு செய்தல்**

விவாக பதிவு கட்டளைச் சட்டத்தின் (112 ஆவது அத்தியாயம்) 10 ஆவது பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கிணங்க நிஹால் சத்துர ஸ்ரீ விதானகே என்னும் பெயருடைய இலங்கையின் பதிவாளர் நாயகம் ஆகிய நான் பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடத்தினை, திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டிருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றேன்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகத் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை,
2020.01.31.

**அட்டவணை**

| இலக்கம் | பதிவு செய்யப்பட்ட திகதி | விபரம் | அமைவிடம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1517 | 28.11.2019 | SMC இன்டர்னல் லயிப் மினிஷ்ரீஸ் தேவாலயம் | முல்லோய ஹேரவாஹெட்ட | கௌரவ பிதா பீ. ரஞ்ஜன் குமார | சீர்த்திருத்துப் பிரிவு |

2-562/1

பதிவு செய்தல் ஆ 96
(F2 ) 2/64

**கட்டிடப் பதிவுச் சான்றிதழ்**

**சான்றிதழ் இலக்கம் - 1517**

விவாக பதிவு கட்டளைச் சட்டத்தின் (112 ஆவது அத்தியாயம்) 10 ஆவது பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க நிஹால் சத்துர ஸ்ரீ விதானகே என்னும் பெயருடைய இலங்கையின் பதிவாளர் நாயகம் ஆகிய நான் பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடத்தினை, திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டிருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றேன்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை,
2020, சனவரி 31.

**அட்டவணை**

| விபரம் | அமைவிடம் | | மாவட்டம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| | கிராமம் அல்லது வீதி மற்றும் நகரப் பிரிவு | பற்று கோறளை அல்லது மாவட்டத்தின் வேறு பிரிவு | | | |
